# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

2016/2017 (டிசம்பர் 2019)

## TLS 3223 நவீன இலக்கியக் கோட்பாடும் விமர்சனக் கோட்பாடும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இலிருந்து இரு வினாக்களையும் பகுதி – II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

1. (அ) இலக்கியக் கோட்பாடு, இலக்கிய விமர்சனக் கோட்பாடு, இலக்கிய விமர்சனம் ஆகியவற்றை வரையறை செய்து அவற்றுக்கிடையிலான தொடர்புகளை விளக்குக. (10 புள்ளிகள்)

   (ஆ) நீர் அண்மையில் வாசித்த ஒரு சிறுகதையை ஏதாவது ஒரு இலக்கியக் கோட்பாட்டின் அடிப்படையில் விமர்சனம் செய்க. (10 புள்ளிகள்)

2. (அ) ஐரோப்பிய மொழிகளில் தோன்றிய இலக்கியக் கோட்பாடுகளின் உள்ளார்ந்த கூறுகளின் அடிப்படையிலான வரலாற்றுக் கட்டங்களைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள் )

   (ஆ) அவற்றுள் ஒரு காலகட்டத்தைக் குறிப்பிட்டு, அக்காலகட்டத்தில் இலக்கியம் தொடர்பாகச் செல்வாக்குச் செலுத்திய விடயங்களைத் தெளிவுறுத்துக. (15 புள்ளிகள்)

3. (அ) அமைப்பியல் வாதம் தோன்றுவதற்குப் பங்களித்த சிந்தனையாளர்கள் ஐவரைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள் )

   (ஆ) போர்டினன்ட் டி சசூர் முன்வைக்கும் அமைப்பியல் கோட்பாட்டை விளக்குக. (15 புள்ளிகள் )

## பகுதி – II

4. மார்க்சிய இலக்கியக் கோட்பாட்டின் அடிப்படை அம்சங்கள் யாவை? விளக்குக. (20 புள்ளிகள் )

5. "தலித்திய விமர்சனம் அதிகாரத்துக்கு எதிரான ஒரு சிந்தனை முறையாகும்" ஆராய்க. (20 புள்ளிகள் )

6. பின் நவீனத்துவம் முன்வைக்கும் சிந்தனைப் போக்குகளைக் குறிப்பிட்டு, அவை பற்றிய விமர்சனங்களை மதிப்பிடுக. (20 புள்ளிகள் )

7. "பெண்ணிய இலக்கிய விமர்சனக் கோட்பாடு" என்றால் என்ன என்பதைத் தெளிவுபடுத்தி, அதன் வகைப்பாடுகளை விளக்குக. (20 புள்ளிகள் )